IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
E.P.54/2019 in O.S.NO:329/1996

__DEP OF WITNESS:__PW1 NAME: M.K.Sathiyamoorthy Date:10-11-2021

__8ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை__

நான் குடியாத்தத்தில் குடியிருக்கிறேன். தாவா சொத்திற்கும் எனது வீட்டிற்கும் சுமார் 3 கிலோ மீட்டர் இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 சுவாதீன சான்று மேற்படி நிறைவேற்று மனுவில் பெறப்பட்டதாகும். ம.சா.ஆ.1 ஆவணத்தில் 8ம் எதிர்மனுதாரரின் கையொப்பம் இல்லை. நிறைவேற்று மனுவில் 01.10.2019ல் சொத்தின் சுவாதீனம் எடுத்ததின் அடிப்படையில் நிறைவேற்று மனு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. கஜேந்திரனிடமிருந்து சுவாதீனம் எடுத்ததாக அவரது கையொப்பம் இல்லை. நிறைவேற்று மனுவில் உள்ள எந்த எதிர்மனுதாரர்களின் கையொப்பம் ம.சா.ஆ.1 ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான் அவர்கள் கையெழுத்து போட மறுத்துவிட்டார்கள் அதுபோன்று அந்த ம.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை. ம.சா.ஆ.1 ஆவணத்தில் எதிர்மனுதாரர்கள் இருந்தார்களா இல்லையா என்பதை பொறுத்து எழுதப்படவில்லை. என்னுடைய கையெழுத்து ம.சா.ஆ.1ல் உள்ளது எதிர்மனுதாரர்கள் உள்ளதையோ இல்லாதையோ பற்றியோ அவர்கள் இருந்திருந்தால் அதைபொறுத்து எழுத சொல்லி அமினாவிடம் நான் கேட்கவில்லை. ம.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளதா அதுதான் உண்மையா என்றால் உண்மைதான். நான் சொல்வது போன்று எதிர்மனதாரர்கள் தாவா இடத்தில் இல்லை என்றும் இருந்திருந்தால் எழுதியிருப்பார்கள் என்றும் வழக்கிற்காக நான் இருந்ததாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்தில் நான் 09.10.2019ல் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 நான் தாக்கல் செய்தது தான். அதில் மனுபெறப்பட்ட தேதி 24.10.2019என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். சாட்சி தானாக 09.10.2019ல் ஆன்லைன் மூலமாக தாக்கல் செய்ததாக கூறுகிறார். நான் சொல்வது போன்று ஆன்லைனில் புகார் அனுப்பியதற்கு அத்தாட்சி எதுவும் தாக்கல் செய்யவில்லை. 09.10.2019ல் நான் புகார் எதுவும் அனுப்பிவைக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 வழக்கிற்காக முன்தேதியிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. 8வது எதிர்மனுதாரரும் அவரது மகனும் தாவா நிலத்தில் உழுது மண் வரப்பு அமைத்ததை நான் நேரடையாக பார்த்தேன். அந்த விவரம் எனக்கு 08.10.2019ல் தெரியும். நான் விவரம் சொல்லி ம.சா.ஆ.2 புகார் தயாரிக்கப்பட்டது. அதில் உள்ள விவரங்களை தெரிந்துகொண்டு தான் கையொப்பம் போட்டேன். நான் கொடுத்த புகாரில் நான் நேரடையாக பார்த்ததாக எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சி தானாக ஏற்கனவே அவர்கள் அத்துக்கல்லை பிடுங்கி உழவு செய்திருந்தார்கள் அதன் பின்பு பார்த்ததால் புகாரில் அவ்வாறு கூறியுள்ளேன். ஆனால் புகாரில் நான் பார்த்ததாக கூறவில்லை. புகாரில் நபர்கள் என்று மட்டும்

குறிப்பிட்டுள்ளேன் எத்தனை நபர்கள் என்று குறிப்பிடவில்லை, தெரிந்தவர்களா என்றும் தெரியாதவர்களா என்று குறிப்பிடவில்லை. அந்த நபர்கள் யார்யார் என்று விசாரித்து இந்த மனுவில் தரப்பினர்களா சேர்த்தீர்களா என்றால் இல்லை. நான் சொல்வதுபோன்று 08.10.2019ம் தேதியன்று எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும் பொய்யாக புகார் கொடுத்து பொய் சங்கதிகளுடன் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் நான் சொல்வதுபோன்று சம்பவம் நடைபெற்று இருந்தால் அனைத்து நபர்களையும் விசாரித்து மனுவில் தரப்பினர்களாக சேர்த்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. 01.10.2019ம் தேதியன்று நான் தாவா சொத்தினை சுவாதீனம் எடுத்த பிறகு மனு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது என்றும் அத்துடன் அந்த உத்தரவு முடிவுக்கு வந்துவிட்டது என்றும் அதிலிருந்து எதிர்மனுதாரர்கள் எவ்வகையிலும் தாவா சொத்தில் இடையூறு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் நிறைவேற்று மனு பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதை நான் தான் தாக்கல் செய்தேன். நிறைவேற்று மனுவுடன் நான் தாக்கல் செய்துள்ள பிரமாணத்தில் 8ம் எதிர்மனுதாரர் சட்த்திற்கு முரணாக தாவா சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சித்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 01.10.2019ம் தேதி சுவாதீனம் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட பிறகு எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தடைஉத்தரவு எதுவும் பெறவில்லை. இ.பி.86/2011 மனுவில் சுவாதீன உத்தரவு மற்றும் தான் உள்ளது தாவா சொத்தில் அத்துமீறி நுழையக்கூடாது என்று உத்தரவு இல்லை. நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போன்று எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றம் எதிர்மனதாரர் என்னை எவ்வகையிலும் மிரட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.2 புகாரில் வேறு நபர்கள் யாரேனும் சம்பவத்தை பார்த்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை எதிர்மனதாரரின் ஆட்கள் தான் அங்கு இருந்தார்கள். அக்கம்பக்கத்தில் உள்ள நிலம் 600 அடி தள்ளிதான் உள்ளார்கள். உண்மையில் சம்பவம் நடைபெற்று இருந்தால் அக்கம்பக்கம் உள்ள நபர்கள் பார்த்ததாக புகாரில் தெரிவித்திருப்பேன் என்றம் அவ்வாறு சம்பவம் நடக்காததால்தான் அதை பற்றி தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரரும் அவரது சகோதரரும் தாவா சொத்தினை ஒன்றாக அனுபவித்தார்களா என்றால் இல்லை தனிதனியாக உட்பிரிவு செய்து அனுபவித்தார்கள். தாவா சொத்தில் அத்துக்கல் நடவேண்டும் என்று எந்தவித உத்தரவும் உள்ளதா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை அந்த வகையில் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்காது. நீதிமன்றம் உத்தரவு இல்லாமல் அமீனா கல் நட்டுள்ளது நீதிமன்ற உத்தரவிற்கு எதிரானது என்று சொன்னால் சரியல்ல. அமீனா தாவா சொத்தில் கல் நட்டதாக சொல்வது தவறு என்றும் அவ்வாறு கல்நடவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாலுக்கா அலுவலகத்தில் கல் வாங்குவதற்கு பணம் கட்டவில்லை. தாலுக்கா அலுவலகத்தில் கல் வாங்கி அந்த கல்லை நடுவார்கள் என்று சொன்னால் அதுபோன்று நடைமுறை இல்லை. நான் சொல்வது தவறு என்றும் வருவாய் துறை மூலமாகதான் கல் வாங்கி நடுவது நடைமுறை

என்று சொன்னால் சரியல்ல. ஆகையினால் நான் சொல்வது போன்று கல் நடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் எவ்வித தவறும் செய்யவில்லை என்றும், பொய்யான மனுவினை அவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனதாரர் நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக எவ்வகையிலும் செயல்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது நிலத்தில் பயிர் செய்வதற்கு ஆட்கள் இல்லை லீசுக்கு விட்டுள்ளேன் தேங்காய் தோப்பில் உள்ள தேங்காய்களை மட்டும் விற்றுவிடுகிறேன். நிலத்தினை யாருக்கும் லீசுக்கு விடவில்லை. 8ம் எதிர்மனுதாரரின் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய்யான மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்பதால் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மனு சங்கதிகளின் அடிப்படையிலும் சட்டத்தின் அடிப்படையிலும் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்கள் வழக்கிற்காக தயார்செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்பதால் நிராகரிக்கப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/. A.CHELLAPANDIAN
DISTRICT MUNSIF